بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் செய்ய வேண்டுமென்றால் பள்ளிவாசல் கட்டுங்கள். அதன் மூலம் மக்களின் கவனம் திரும்பும். இவ்விஷயம் முழுப்பொழிவுடன் முழுமையாக நிறைவேறிய காட்சி நமக்கு காணக் கிடைக்கின்றது. மக்களின் நிலையில் எப்படி மாற்றம் ஏற்படுகின்றது என்பதை மனிதன் காணும் போது மிகவும் வியப்பு ஏற்படுகின்றது.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 27.11.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் எல்லோரும் அறிந்தது போன்று கடந்த வாரம் நான் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்காக ஜப்பான் சென்றிருந்தேன். அது ஜப்பானில் நமது முதல் பள்ளிவாசலாகும். அங்குள்ள வெளிப்படையான சூழலை வைத்து பார்க்கும் போது பள்ளிவாசல் கட்டுவது என்பது மிகவும் ஒரு கடினமான காரியமாகும். நமது வக்கீல் ஒரு ஜப்பானியர் ஆவார். அவர் என்னை சந்தித்து, பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால், இந்த பகுதியில் பள்ளிவாசல் கட்டுவதற்கு உங்களுக்கு அனுமதி கிடைத்ததை எண்ணி நான் மிகவும் வியப்படைகின்றேன். எனக்கு நம்பிக்கையும் ஏற்படவில்லை என்று கூறினார். மேலும் அவர் கூறினார். நான் உங்கள் வழக்கை நடத்தி வந்தேன். ஆனால், இதில் வெற்றி கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. எனவே தான் நான் ஒரு கட்டத்தில் இதனை விட்டு விடுங்கள். அது தான் உங்களுக்கு சிறந்ததாக இருக்கும் என்று ஜமாஅத் அமைப்பிடம் கூறிவிட்டேன். ஆனால், உங்கள் ஜமாஅத் மக்களின் நிச்சய உறுதியும் வியக்கத்தக்கதாக இருந்தது. அவர்கள் என்னிடம் கூறினர். நீங்கள் முயற்சி செய்து கொண்டேயிருங்கள். இதே இடம் இன்ஷா அல்லாஹ் தஆலா எங்களுக்கு கிடைக்கும். மேலும் இதில் பள்ளிவாசலும் கட்டப்படும். இன்று இந்த இடத்தில் பள்ளிவாசலை பார்ப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமான விஷயமாகும். அது எனக்கு ஒரு அடையாளமுமாகும்.

எவ்வாறிருப்பினும், இது இறை அருளாகும். அவன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜமாஅத்தின் மீது இந்த அருளை செய்து வருகின்றான். மேலும் நமது ஈமானையும் அதிகரிக்கச் செய்கின்றான். அல்லாஹ் ஒவ்வொரு பணிக்கும் ஒரு நேரத்தை வைத்திருக்கின்றான். அந்த நேரம் வரும் போது இறை அருளினால் அந்த பணி முழுமையடைந்து விடுகின்றது. பள்ளிவாசல் உருவாக வேண்டுமென்று அல்லாஹ் நாடிய போது எல்லா தடைகளுக்கு இடையிலும் பள்ளிவாசல் கட்டுவதற்குரிய பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கி விட்டான். மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி இந்த நாட்டில் பரவுவதற்குரிய முதல் தலைமையகம் உருவாகி விட்டது. ஒரு தலைமையகம் அல்லது ஒரு பள்ளிவாசல் மட்டுமே முழு நாட்டிலும் இஸ்லாத்தை பரப்புவதற்கான நோக்கத்தை பூர்த்தி செய்து விடாது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், தற்போது ஜப்பானில் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

நான் சிலரின் தாக்கங்களை எடுத்துரைப்பேன். அதிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக எடுத்துரைக்கப்பட்ட அசல் இஸ்லாத்தின் அசல் போதனைகளை ஜப்பானியர்கள் எப்படி பார்த்தார்கள் என்பது தெரிய வரும். இது நடக்க இருந்தது. ஏனென்றால், நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர் மூலமாகவே இந்த பணி நிச்சயிக்கப்பட்டிருந்தது. எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உலகின் மற்ற நாடுகளில் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் துடிப்பை வெளிப்படுத்தினார்களோ மேலும் அதற்காக முயற்சியையும் செய்தார்களோ அதே போன்று ஜப்பான் தொடர்பாகவும் துடிப்பு கொண்டிருந்தார்கள்.

கூறினார்கள்: ஜப்பானியர்களுக்காக ஒரு புத்தகம் எழுதப்பட வேண்டும். ஜப்பானிய மொழியில் புலமை பெற்ற ஜப்பானியர் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து அதன் மொழியாக்கம் செய்தல் வேண்டும். பின்னர் அதன் 10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு ஜப்பானில் அந்நூல் வெளியிடப்பட வேண்டும். மேலும் ஜப்பானில் நல்லுள்ளம் கொண்ட மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வார்கள்.

அல்ஹம்துலில்லாஹ். இன்று திருக்குர்ஆன் மொழியாக்கம் உட்பட ஆயிரக்கணக்கில் ஜப்பானியர்களுக்காக அவர்களின் மொழியில் ஜமாஅத் சார்பாக Litreture கள் தயாராகி வருகின்றன. இப்போது இந்த பள்ளிவாசல் திறக்கப்பட்ட பிறகு அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆசைகளை முழுமை செய்வதற்கு எந்த அளவிற்கு வழிவகை செய்திருக்கின்றான் என்றால் இப்போது கோடிக்கணக்கான நபர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைந்து வருகின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று விருந்தினர்களின் தாக்கங்களை எடுத்துரைப்பேன். இப்போது மக்களுக்கு இஸ்லாத்தை பற்றி இருந்த தவறான கருத்துக்கள் நீங்கி விட்டன. இதனை அவர்களே வெளிப்படுத்தியுள்ளனர். நாங்கள் பள்ளிவாசலின் திறப்பு விழாவில் கலந்து கொண்டதன் மூலம் எங்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான, சரியான போதனை தெரிந்து விட்டது. இஸ்லாத்தை பற்றிய எங்களது தப்பெண்ணமும் அகன்று விட்டது என்றும் கூறினர்.

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் செய்ய வேண்டுமென்றால் பள்ளிவாசல் கட்டுங்கள். அதன் மூலம் மக்களின் கவனம் திரும்பும். இவ்விஷயம் ஜப்பானிலும் உலகின் எல்லா இடங்களிலும் முழுப்பொழிவுடன் முழுமையாக நிறைவேறிய காட்சி நமக்கு காணக் கிடைக்கின்றது. பள்ளிவாசல் திறப்பு விழா

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மக்களின் நிலையில் எப்படி மாற்றம் ஏற்படுகின்றது என்பதை மனிதன் காணும் போது மிகவும் வியப்பு ஏற்படுகின்றது. ஜுமுஆவின் நாளன்று ஜுமுஆ நேரத்தில் பள்ளி திறப்பு விழாவின் போது ஜப்பானின் மக்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்திருந்தனர். நான் அங்கு செல்லும் போது அவர்கள் முதலில் வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். பின்னர் பள்ளியில் வந்து அமர்ந்து விட்டார்கள். குத்பாவும் கேட்டார்கள். பின்னர் நாம் தொழுவதையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுமார் 49, 50 ஜப்பானிய விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களில் புத்த மதம் ஸிண்டோயிஸம் மற்றும் கிறித்தவ மதத்தை சார்ந்த தலைவர்களும் வந்திருந்தனர். அவர்களில் அந்த பகுதியில் பாராளுமன்ற உறுப்பினரும் அடங்குவார். மேலும் பல்கலைக்கழக பேராசிரியர்களும் இன்னும் பல்வேறு துறைகளைச் சார்ந்த நபர்களும் வந்திருந்தனர். கலந்து கொண்ட விருந்தினர்களின் தாக்கத்தை நான் எடுத்துரைக்கின்றேன்.

* Church of Jesus Christ ன் Director ஆவார். அவரது பெயர் Osamo ஆகும். அவர் கூறுகின்றார். ஜப்பானியர்கள் மற்றும் இஸ்லாத்திற்கிடையில் இந்த பள்ளிவாசல் ஒரு பாலமாக திகழும் என நாம் நம்புகின்றேன்.

* ஒரு துறவி கூறுகின்றார். ஒரு புத்த மதத்தை சார்ந்தவனாக இந்த பள்ளியில் நுழைந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. புத்த மதத்தை சார்ந்தவர்கள் அல்லது முஸ்லிம் அல்லாதவர்கள் பள்ளிவாசலில் நுழைவது தடுக்கப்பட்டதாகும் என்றே நான் எண்ணியிருந்தேன். ஆனால், நாங்கள் மிகவும் உற்சாகமாக வரவேற்கப்பட்டோம். மேலும் குத்பாவிலும் தொழுகையிலும் கலந்து கொண்டு எங்களுக்கு மிகவும் மன மகிழ்ச்சி ஏற்பட்டது. இஸ்லாத்தைப் பற்றி நிறைய ஞானம் கிடைத்தது.

* பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார். எங்கள் பகுதியில் பள்ளிவாசல் கட்டப்பட்டிருப்பதை நாங்கள் மிகவும் வரவேற்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைளுக்கேற்ப மனித இனத்தின் மீது அன்பு கொள்ளக்கூடியவர்கள் மற்றும் படைப்பின சேவை செய்பவர்களின் தலைமையகமாக இந்த பள்ளிவாசல் திகழும் என நாங்கள் நம்புகின்றோம்.

* பாராளுமன்ற உறுப்பினர் அவர் ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார். இந்த அழகிய பள்ளிவாசலை பார்த்ததுமே எனது அனைத்து பயண களைப்பும் நீங்கி விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஜப்பான் நில நடுக்கத்தின் போது தொண்டாற்றி என்ன நற்பெயரை சம்பாதித்ததோ அதனை இந்த பள்ளிவாசல் அதிகரிக்கச் செய்வதற்கு காரணியாக திகழும் என நான் நம்புகின்றேன்.

* பல்கலைக்கழக பேராசிரியர் மஸாக்கி ஹீரோபோ கூறுகின்றார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசல் கட்டப்படுவது அவசியமானதாகும். உலகத்தில் இஸ்லாத்தின் அழகிய முகத்தை காட்டுவதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் செய்கின்ற பணிகள் மிக சிறப்பானதாகும். இந்த பள்ளிவாசல் மூலமாக ஜமாஅத்தின் அறிமுகம் மேலும் அதிகரிக்கும் என்றும் உலகில் அமைதியும், நிம்மதியும் பரவும் என்றும் நான் நம்புகின்றேன்.

பள்ளிவாசல் தொடர்பாக சனிக்கிழமை மாலை ஒரு வரவேற்பு நிகழ்ச்சியும் பள்ளிவாசல் வளாகத்திலேயே நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் 109 ஜப்பானியர்களும், 8 வெளிநாடுகளைச் சார்ந்த அஹ்மதி அல்லாத விருந்தினர்களும் கலந்து கொண்டனர். அந்த விருந்தினர்களில் President A.M.S City Internation Association அவர்களும், இரண்டு மாநில பாராளுமன்ற உறுப்பினர்களும், 3 நகர பாராளுமன்ற உறுப்பினர்களும், Director of International Tourisum, Univercity ன் பேராசிரியர்களும், அவர்களும் கலந்து கொண்டார்கள். மேலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த டாக்டர்களும், வக்கீல்களும், பேராசிரியர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

* ஒரு புத்த மத துறவி கூறுகின்றார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அவர்களின் வருகை சரியான நேரத்திலேயே நிகழ்ந்துள்ளது. நாம் Paris தீவிரவாத தாக்குதல்களை கேட்டு அச்சத்தில் ஆழ்ந்திருந்தோம். கலீஃபா அவர்களின் ஆழகிய நடையிலும் ஆற்றிய எளிமையான சொற்களை கேட்டு நமக்கு இருந்த இஸ்லாத்தைப் பற்றிய தப்பெண்ணம் அகன்று விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் வருகை மற்றும் இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டது. நமது அச்ச உணர்வை முற்றிலுமாக அகற்றி விட்டது.

* பிறகு நித்து ஹீரோஷி சாஹிப். வக்கீர் ஆவார் இவர். நமக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் சட்ட ஆலோசனை வழங்கிய வக்கீல் சாஹிப் கூறுகின்றார். இது எனது வாழ்நாளின் மிக சிறந்த தருணமாகும். கூறுகின்றார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எல்லா விஷயங்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டது. எங்கு கலீஃபா அவர்கள் அமைதி மற்றும் மென்மையை வலியுறுத்தினார்களோ அங்கு நீதியையும் வலியுறுத்தியுள்ளார்கள். இது மிகவும் நல்ல விஷயம் மற்றும் காலத்தின் தேவையும் ஆகும்.

* ஒரு பல்கலைக்கழக மாணவர் கூறுகின்றார். எனது குடும்பம் புத்த மத பாரம்பரியத்தை கொண்ட குடும்பமாகும். எனது வீடு கோயிலாகும். எனக்கு இஸ்லாத்தின் மீது ஆர்வம் இருந்தது. ஆனால், ஒரு முஸ்லிமுடன் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. புத்தங்களில் என்ன கிடைத்ததோ அதை படித்தேன். ஆனால், இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவை செவியுற்று எனக்கு இஸ்லாத்தின் அசல் வடிவம் காணக் கிடைத்தது. மேலும் ஒரு புதிய அத்தியாயம் எனக்கு ஆரம்பமாகியுள்ளது.

* ஒரு பெண்மணி கூறுகின்றார். இந்த கண்ணிமிகு சபையில் என்னை அழைத்தற்கான நான் நெஞ்சார நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நகரத்தில் இத்துனை அழகிய பள்ளிவாசல் கட்டப்பட்டிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியான விஷயம் தான். நான் ஒரு பல்கலைக்கழக மாணவி ஆவேன். பல்வேறு மார்க்கங்களை நான் ஆராய்ச்சி செய்து வருகின்றேன். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு இஸ்லாத்தைப் பற்றி மிகக் குறைவான அறிவையே நாம் பெற்றிருக்கின்றோம் என்ற உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது. அதன் காரணமாகவே நாம் இஸ்லாத்தைப் பற்றி தப்பெண்ணம் கொண்டிருந்தோம். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவு இக்காலத்தின் தேவையாகும். நான் இந்த சொற்பொழிவின் மூலமாக இஸ்லாத்தைப்

பற்றி மிக அதிகமாக கற்றுக் கொண்டேன். ஜப்பானிய மக்களாகிய நாம் இஸ்லாத்தைப் பற்றி மிக அதிகமாக அறிந்திருக்கவில்லை. மாறாக, நாம் இஸ்லாம் தொடர்பாக அச்ச உணர்வே கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்று இந்த சொற்பொழிவின் வாயிலாக உண்மையில் இஸ்லாம் என்றால் என்ன ? என்பதை தெரிந்து கொண்டோம். பள்ளிவாசல் கட்டப்பட்டதனால் இது போன்ற சந்தர்ப்பங்கள் இன்னும் பல வரும் என நான் நம்புகின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மற்றும் அவர்களின் ஜமாஅத்தை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அன்பு, நேசம், அமைதி அவர்களின் முகத்தில் எனக்கு காணக் கிடைத்தது. அவர்களை சந்தித்தன் மூலம் அவர்களின் மீதான அன்பு எனக்கு மேலும் அதிகமாகி விட்டது.

* இன்னொரு ஜப்பானிய நண்பர் டோயா ராக்கி சாஹிப் கூறுகின்றார். இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதன் மூலமும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவை கேட்டதன் மூலமாகவும் உலக அமைதி பற்றி சிந்தப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்ததற்காக நான் மனமார நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அமைதி பற்றியே பேசினார்கள். மேலும் உலகம் எதிர்கொண்டு இருக்கின்ற மறைமுகமான அபாயங்களை சுட்டிக் காட்டினார்கள். முஸ்லிம்கள் உலகத்தில் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றார்கள் என்ற நமது அச்ச உணர்வையும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அகற்றி விட்டார்கள். நாம் இவர்களோடு இணைந்து உலகின் அமைதிக்காக பாடுபட வேண்டும் என்றே நான் மீண்டும் மீண்டும் கூறுவேன். நாம் இஸ்லாத்தைப் பற்றி படித்து புரிந்து கொள்வது நம் அனைவரின் கடமையாகும்.

* அதே போன்று மற்றுமொரு ஜப்பானிய நண்பர் அவர் ஒரு பள்ளி ஆசிரியர் ஆவார். கூறுகின்றார். ஜமாஅத் கடினமான தருணங்களில் எப்போதும் எங்களுக்கு உதவி செய்து வந்திருக்கின்றது. இதற்கு முன்பு நான் இதனை அறிந்திருக்கவில்லை. ஆனால், இங்குள்ள விருந்தினர்கள் ஜமாஅத் பல்வேறு நிலநடுக்கத்தின் போது உதவி செய்தது என்று கூறினார்கள். அதிலிருந்து நான் அறிந்து கொண்டேன். நான் இங்கு அருகிலுள்ள ஒரு பள்ளியின் ஆசிரியர் ஆவேன். இன்றிலிருந்து இந்த மக்கள் (முஸ்லிம்கள்) அபாயகரமானவர்கள் அல்ல என்று என்னால் எல்லோரிடத்திலும் கூற இயலும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் மிக எளிய நடையில் இஸ்லாத்தை பற்றி கூறினார்கள். அவ்விஷயங்கள் அனைத்தும் மிக எளிதாக புரியக் கூடியவையாகும்.

* அடுத்து ஒரு நண்பர் கூறுகின்றார். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவை கேட்ட பிறகு இஸ்லாத்தின் அடித்தளங்களைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். ஜப்பான் ஒரு தீவு ஆகும். தீவைப் போன்று இங்குள்ள மக்களும் வெளி உலகத்தைப் பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே தான் இஸ்லாம் ஒரு தீவிரவாத மார்க்கம் என்ற சிந்தனையிலிருந்து விலகுவதற்கு முயற்சி செய்வதில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் வருகையும், இந்த பள்ளிவாசலும் இந்த எண்ணங்களை மாற்றுவதில் நேர்மறையான பங்கை அளிக்கும் என நான் நம்புகின்றேன்.

அல்லாஹ்வின் அருளினால் ஊடகங்களிலும் பள்ளிவாசல் திறப்பு விழா பற்றி அதிகமாக செய்தி தரப்பட்டது. மிகப்பெரிய அளவில் இஸ்லாத்தின் செய்தி ஜப்பானியர்களை சென்றடைந்தது. எனது பல நேர்காணல் நடந்தது. மூன்று நேர்காணல்கள் இங்கு பள்ளிவாசலிலேயே நடைபெற்றது. ஒன்று டோக்கியோவில் நடைபெற்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பள்ளிவாசல் திறப்பு விழாவின் போது ஐந்து T.V Channels மற்றும் பல்வேறு பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அல்லாஹ்வின் அருளால் பத்திரிகைகள் மூலமாகவும் பரந்த அளவில் நமது செய்தி சென்றடைந்து விட்டது.

எப்படியிருப்பனும், இந்த T.V Channel கள் மற்றும் செய்தித் தாழ்கள் மற்றும் வலைதளங்கள் மூலமாக ஒட்டு மொத்தமாக பள்ளிவாசல் திறப்பு விழாவையொட்டி வெளியான செய்திகள் 5,20,00,000 மக்கள் வரை சென்று சேர்ந்து இருக்கின்றது. இது அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசைக்கான காட்சியாகும். அது பள்ளிவாசல் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான போதனையை எட்ட செய்ததன் மூலமாக நமக்கு காணக் கிடைத்தன.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதே போன்று Tokiyo விலும் ஒரு Reception நடைபெற்றது. அதில் 63 ஜப்பானிய விருந்தினர்கள் கலந்து கொண்டனர். அதில் ஒரு புத்த மத தலைமை மத குருவும் கலந்து கொண்டிருந்தார். ஒரு Univercity ன் Chansler ம் வந்திருந்தார். பிரபலமான கவிஞரும், பொருளாதார ஆலோசகருமான Mr. Martin கலந்து கொண்டார். ஜப்பானுடைய இரண்டாவது மிகப்பெரிய பத்திரிகை அசாயியின் தலைமை நிருபரும் கலந்து கொண்டிருந்தார். இன்னும் பல்வேறு துறைகளைச் சார்ந்த நபர்களும் கலந்து கொண்டனர்.

* Diyoon Univercity ன் Chansler கூறுகின்றார். நீங்கள் என்ன பேசுவீர்கள் என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால், வெறும் 20 நிமிடத்தில் நீங்கள் கடந்த கால வரலாறு மற்றும் எதிர்காலத்தில் வரக்கூடிய அபாயத்தை சுருக்கமாக எடுத்துரைத்து விட்டீர்கள். நீங்கள் ஆதாரப்பூர்வமாக பேசினீர்கள். போரின் பாதிப்புகளைப் பற்றி எடுத்துரைத்தீர்கள். வர இருக்கின்ற போரிலிருந்து தப்பிக்க வேண்டும் என எச்சரித்தீர்கள். மிகவும் குறைவான நேரத்தில் இஸ்லாத்தின் போதனைகளையும் எடுத்துரைத்து விட்டீர்கள். என்னுடைய சொற்பொழிவு தொடர்பாக மேலும் கூறுகின்றார். உங்களுடைய சொற்பொழிவு ஜப்பான் மற்றும் ஆங்கிலேய மொழியில் வெளியிடப்பட்டு முழு ஜப்பானிலும் விநியோகிக் வேண்டும்.

* ஒரு நண்பர் அவர் பொருளாதார ஆலோசகர் ஆவார். அவர் அமைதி மற்றும் அன்பு என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். அவர் என்னையும் சந்தித்திருந்தார். அவர் கூறுகின்றார். நான் புத்தகத்தில் என்னென்ன எழுதியுள்ளேனோ அதனை உங்கள் சொற்பொழிவின் வாயிலாக இன்று நீங்கள் முத்திரை பதித்து விட்டீர்கள்.

அல்லாஹ்வின் அருளினால் பள்ளிவாசல் திறப்பு விழா மற்றும் எனது சுற்றுப் பயணத்தின் மூலமாக நான் கூறியது போன்று ஜப்பானில் நல்ல நேர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. பள்ளிவாசல் காரணமாக ஏற்பட்டுள்ள பரந்த அறிமுகத்தை மேலும் அதிகரிப்பதற்கான பாக்கியத்தை அல்லாஹ் ஜப்பான் ஜமாஅத்திற்கு வழங்குவானாக. மேலும் ஜப்பானியர்களுக்கு நமது ஜமாஅத்தின் மீது இருக்கின்ற எதிர்பார்ப்புகளை அவர்கள் பூர்த்தி செய்பவர்களாக திகழட்டுமாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆசைகளுக்கு ஏற்ப அங்கு இஸ்லாம் அதி விரைவாக பரவ முயற்சியும் செய்யுங்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று மவ்லவிகளின் பகைமையும், வெறுப்பும் அவ்வப்போது பாகிஸ்தானில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஜமாஅத்தின் முன்னேற்றத்தைக் கண்டு அவர்களின் பொறாமையின் நெருப்பு எரிந்து கொண்டே இருக்கின்றது. கடந்த நாட்களில் மிகவும் காட்டுமிராண்டித்தனமான, அநியாயமான செயல் இந்த மவ்லவிகளிடமிருந்தும், தீவிரவாத அமைப்புகளிடமிருந்தும் பாகிஸ்தானில் ஜஹலம் என்ற இடத்திலும் நடைபெற்று இருக்கின்றது என்பதையும் நான் இங்கு கூற விரும்புகின்றேன். ஒரு அஹ்மதி முதலாளியின் Chipboard தொழிற்சாலைக்கு நெருப்பு மூட்டப்பட்டது. அதில் வேலை செய்த அஹ்மதி தொழிலாளர்களையும் அதன் முதலாளிகளையும் உயிருடன் எரித்து விட வேண்டும் என்பதே அவர்களின் திட்டமாக இருந்தது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் தமது திட்டத்தில் வெற்றி பெற முடியவில்லை. எவ்வாறிருப்பினும் பொருள் நஷ்டம் கண்டிப்பாக ஏற்பட்டுள்ளது. இவ்வாறு செய்து அஹ்மதிய்யத்தை ஒழித்து விடலாம் என்றும் அஹ்மதிகளின் பற்றையும், ஈமானையும் பறிக்க முடியிம் என்றும், அவர்களை அஹ்மதிய்யத்தில் இருந்து விலக்கி முடியும் என்றும் அவர்கள் நினைக்கின்றன்றனர். 1974 ஆம் ஆண்டும் இவர்கள் நெருப்பை மூட்டினார்கள். அஹ்மதிகளை துன்பத்தில் ஆழ்த்த முயற்சி செய்தார்கள். ஆனால் நெருப்பு மூட்டியவர்கள் மற்றும் அஹ்மதிகளை துன்பத்தில் ஆழ்த்த நினைத்தவர்களின் எந்தவொரு ஆசையும் நிறைவேறவில்லை. நாம் பார்த்தோம். அவர்களின் உள்ளத்திலிருந்தது அவர்களின் உள்ளத்தின் ஏக்கமாகவே முடிந்து போனது. அஹ்மதிகளை பிச்சை பாத்திரம் ஏந்தச் செய்வோம் என்று கூறியவர்கள் பிச்சை எடுத்ததை நாம் பார்த்தோம். இது தான் ஜமாஅத்துடன் அல்லாஹ் நடந்து கொள்ளும் முறையாகும். எனவே, சோதனை நமது ஈமானை அசைக்கக் கூடியவை அல்ல. மாறாக, உறுதிபடுத்தக் கூடியதாகும்.

இந்த Chipboard தொழிற்சாலை சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் சாஹிப் ஸாதா மிர்ஸா முனீர் அஹ்மது அவர்களுக்கு சொந்தமானதாகும். அன்னாருடைய மரணத்திற்குப் பிறகு அது அன்னாரின் பிள்ளைகளுக்கு சொந்தமாகியது. இது போன்ற சோதனைகளின் போது ஒரு முஃமின் எதனை வெளிப்படுத்த வேண்டுமோ அதனை இவர்கள் வெளிப்படுத்தி இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களின் வாயிலிருந்து நன்றியின் வார்த்தைகள் வெளிப்பட்டன. அல்லாஹ் தஆலா அஹ்மதி ஊழியர்களின் உயிர்களையும் பாதுகாத்தான். பெண்களையும், குழந்தைகளையும் அல்லாஹ் பாதுகாத்தான். அவர்களின் கண்ணித்தையும் பாதுகாத்தான்.

மிர்ஸா முனீர் சாஹிப் அவர்களின் மூத்த மகன் மிர்ஸா நஸீர் அஹ்மது சாஹிப் தாரிக் அவர்கள் இந்த தொழிற்சாலையின் தலைவர் ஆவார்கள். அந்த தொழிற்சாலைக்குள்ளேயே வசித்து வருகின்றார்கள். அதே போன்று அவரது மகனும் அதே தொழிற்சாலையில் தான் பணியாற்றுகின்றார். அவரது விடும் தொழிற்சாலையின் வளாகத்திலேயே இருந்தது.

அல்லாஹ் அவர்களை காப்பாற்ற எண்ணி இருந்தான். அதே போன்று அங்கு பணி செய்த பல அஹ்மதி தொழிலாளிகளும் காட்டில் அங்கும் இங்கும் மறைந்து கொண்டார்கள். பின்னர் நமது குத்தாம்கள் இங்கும் அங்கும் தேடி பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சேர்த்தார்கள். அந்த தொழிற்சாலையின் Security Incharge ஆன கமர் அஹ்மது அவர்களை போலீஸ் கைது செய்தது. இப்போது சிறையில் உள்ளார். அவருக்கு எதிராக மிக கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அல்லாஹ் தஆலா அன்னாரின் விடுதலைக்கான ஏற்பாட்டினை செய்வானாக.

மிர்ஸா நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி, மருமகள் மற்றும் பிள்ளைகள் வெளிப்படுத்திய பொறுமை மிகவும் மதிக்கத்தக்கதாகும். ஒரு வகையில் நல்ல விஷயம் என்னவென்றால் சில அஹ்மதி அல்லாத நபர்களும் இந்த அநீதிக்கு எதிராக குரல் பாகிஸ்தானில் எழுப்பியுள்ளனர்.ஒரு T.V நிகழ்ச்சியில் அங்குள்ள D.B.O மற்றும் அரசியல்வாதிகள் நாங்கள் நீதியை நிலைநாட்டுவோம். குற்றவாளிகளை பிடிப்போம் என்று கூறியுள்ளனர். நிகழ்ச்சியின் நெறியாளரும் இந்த அநீதிக்கு எதிராக மிக வெளிப்படையாக பேசி இருக்கின்றார்.

அதே போன்று இந்த தொழிற்சாலைக்கு நெருப்பூட்டிய பிறகு அருகிலுள்ள காலா குஜ்ரா, மாமூதா என்ற நமது இரு சிறிய ஜமாஅத் இருக்கின்றது. அங்கு சென்று பள்ளிவாசலில் தாக்குதல் நடத்தினார்கள். மவ்லவிகள் பள்ளிவாசலின் மீது தாக்குதல் நடத்தினர். பின்னர் பள்ளிவாசலின் ஸப்புகளையும் (தொழுகை விரிப்புகளையும்), சாமான்களையும் வெளியே தூக்கி எறிந்து தீக்கிரையாக்கினர். பின்னர் பள்ளிவாசலை ஆக்கிரமித்தனர். எப்படி இருப்பினும் போலீஸ் அவர்களை வெளியேற்றி விட்டார்கள். பள்ளிக்கு பூட்டு போட்டு விட்டார்கள். அல்லாஹ் அந்த பகுதியின் எல்லா அஹ்மதிகளையும் பாதுகாப்பாக வைப்பானாக. அல்லாஹ் தஆலா பாகிஸ்தானிலும் நீதியை நிலைபெறச் செய்வானாக. அந்த தொழிற்சாலையில் பணியாற்றிய தொழிலாளிகளின் தொழில் முடங்கி விட்டது. அல்லாஹ் அவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தருவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 27.11.2015
Tamil Translation : Moulavi.Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516